# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 27 புதன்கிழமை 13.09.2023 கதிர் 71


# சர்வதேச விசாரணையைப் புறந்தள்ளி மீண்டும் நாட்டை வங்குரோத்தடையச் செய்ய வேண்டாம்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கையில் வலியுறுத்து



சர்வதேச விசாரணையைப் புறந்தள்ளி மீண்டும் மீண்டும் விசாரணைக்குழுக்களை அமைத்து நாட்டை மேலும் வங்குரோத்தடையச் செய்ய வேண்டாம், என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனாநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழர்களுக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட யுத்தக்குற்றங்கள், மனித உரிமைகள் மீறல், அத்துடன் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை நிராகரிப்பதாகவும் இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் அனைத்துப் பரிந்துரைகளையும் நிராகரிப்பதாகவும் இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகள் நாட்டை மேலும் வங்குரோத்து நிலைமைக்கே இட்டுச் செல்லும், என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2 ➤

## அமைச்சர் ஹரீனுக்கு எதிரான விசாரணை வாக்குமூலம் பதிவு செய்து முடிவுறுத்துமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்து அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கு எதிரான விசாரணைகளை முடிவுறுத்துமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக சட்டமா அதிபர் இன்று உயர் நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக தம்மை கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி, ஹரின்

2 ➤

## ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை கூட்டத்தொடரில் ஜனாதிபதி விசேட உரை



ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டிலிருந்து புறப்பட்டுள்ளார்.

இன்று அதிகாலை 3.15 மணியளவில் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஜனாதிபதி விக்கிரமசிங்க மற்றும் இலங்கைக் குழுவினர் புறப்பட்டு சென்றுள்ளனர்.

78 ஆவது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

குறித்த கூட்டத்தொடரில் 21ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளதோடு உலகத் தலைவர்கள், உலகளாவிய சவால்களை எவ்வாறு

2 ➤

## யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கையடக்கத் தொலைபேசி பாவிக்கத் தடை !

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கையடக்கத் தொலைபேசிகளைப் பாவிக்க பணியாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் டொக்டர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடமை நேரத்தில் தாதியர்கள், சுகாதார ஊழியர்கள், பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் நோயாளர் பராமரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் கையடக்கத் தொலைபேசியை பாவிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில், சிகிச்சைககாக அனுமதிக்கப்பட்ட 8 வயதுச் சிறுமிக்கு இடது கை மாணிக்கட்டுடன் அகற்றப்பட்ட சம்பவம் அண்மையில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

தாதியர்களின் கவனக் குறைவினாலையே சிறுமியின் கை அகற்றப்பட்டது என பல தரப்பினராலும் குற்றம் சாட்டப்பட்டுவரும் நிலையில் கடமையின் பொது கையடக்கத் தொலைபேசிகளைப் பாவிக்க தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. (04)







எரிபொருள் விலை தினமும் மாறும் 02

கல்வி முறையில் மாற்றம் வேண்டும் 04

கூகிள் மீது வழக்கு 07

நல்லூரான் தேர்த்திருவிழா 08

# எரிபொருள் விலை முறைமையில் மாற்றம் கொண்டுவரத் திட்டம்





எரிபொருள் விலையை நாளாந்தம் திருத்தம் செய்யும் முறைமையை அடுத்த வருடம் முதல் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தனது டுவிட்டர் கணக்கின் பதிவொன்றில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபன விநியோகஸ்தர்கள் சங்கத்துடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே இது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நடைபெற்ற இச்சந்திப்பில், எரிபொருள் விநியோகம் மற்றும் புதிய எரிபொருள் நிலையங்களின் எதிர்கால அபிவிருத்தி குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும்,

எரிபொருள் விநியோக நடவடிக்கைகளைத் தானியங்கிக் கணினிமயமாக்கப்பட்ட முறைமைக் மாற்றுவது குறித்து இதன்போது விவாதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார். (04)

## சர்வதேச விசாரணையைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் 269 பேர் கொல்லப்பட்டதுடன் பலநூறுபேர் காயமடைந்துமுள்ளனர். மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதமராகவும் இருந்த காலகட்டத்திலேயே இத்தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. இக்குண்டுத்தாக்குதலில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 45பேரும் கொல்லப்பட்டனர். இதனால் சுற்றுலாத்துறையே பாரிய வீழ்ச்சியடைந்தது. இதன் காரணமாக பலநூறு மில்லியன் ரூபாய் அரசுக்கு இழப்பும் ஏற்பட்டது.

இது பற்றி விசாரணைகளை நடாத்துவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றும் நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. இந்த குழக்களின் அறிக்கைகள் முழுமையாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ வெளியிடப்படவில்லை. அவற்றை முழுமையாக வெளியிட முடியாது என்று கூறியுமிருந்தனர்.

பின்னர் கோட்டபாய ராஜபக்ச ஜனாதிபதியாக வந்தபொழுது அவரும் ஒரு விசாரணைக்குழுவை நியமித்தார். அதிலும் எத்தகைய வெளிப்படைத்தன்மையுமில்லை. மக்களுக்கும் அதுபற்றி எதுவும் தெரியாது.

இப்பொழுது மூன்றாவது முறையாக ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க அவர்கள் பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க இருப்பதுடன், நீதிபதிகளை உள்ளடக்கிய மற்றொரு விசாரணைக் குழுவையும் நியமிக்க உள்ளார்.

ஜனாதிபதியானவர் பாதுகாப்புத்துறையின் அமைச்சராகவும் இருக்கிறார். ஆனால், உயிர்த்த ஞாயிறு தொடர்பாக சனல் 4 வெளியிட்ட ஆவணக் காணொளியை பாதுகாப்பு அமைச்சு முற்றாக நிராகரிப்பதாகக் கூறியுள்ளது. இந்த நிலையில், ஒருபுறம் உயிர்த்த ஞாயிறு கொலைகளை முற்றுமுழுதாக நிராகரிக்கும் ஜனாதிபதி மறுபுறத்தில் அதற்கான விசாரணை ஆணைக்குழுக்களை நியமிப்பது வேடிக்கையாகவும் முரண் நகையாகவும் இருக்கின்றது.

ஏற்கனவே சிங்கள தரப்பில் பல்வேறு கட்சித்தலைவர்களும் பொது அமைப்புகளின் தலைவர்களும் தமிழர் தரப்புகளும் சர்வதேச விசாரணையைக் கோரியுள்ள ஒரு சூழ்நிலையில், மீண்டும் மீண்டும் பல மில்லியன் ரூபாய் மக்களின் வரிப்பணத்தைச் செலவு செய்து, விசாரணைக்குழக்களை அமைப்பது அர்த்தமற்றதும் காலத்தை வீணடிக்கும் செயலுமாகும்.

அதே சமயம், ஜனாதிபதியின் தலைமையில் இயங்கும் ஐக்கிய தேசியக் கட்சியும் சர்வதேச விசாரணையை நிராகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, இந்த விசாரணைகள் என்பது குறுகிய அரசியல் இலாபநோக்கங்களுக்காகச் செயற்படுத்தப்படுகிறதா? அல்லது, இந்த நாட்டின் கௌரவம் சர்வதேச அளவில் பாதுகாக்கப்படவேண்டும், இந்த நாடு வங்குரொத்து நிலையில் இருந்து மீள்வதற்கு சர்வதேச முதலீடுகள் உள்ளீர்க்கப்படவேண்டும் என்ற விடயத்தையாவது குறைந்த பட்சம் கவனத்தில் எடுத்துக்கொண்டு முன்னெடுக்கப்படுகின்றனவா? என்ற கேள்வி எழுகின்றது.

ஜனாபதியின் ஆணைக்குழுக்களின் ஊடாக இலங்கை நாட்டின் மீது சர்வதேச நம்பகத்தன்மையை உருவாக்க முடியாவிட்டால் இலங்கை இழந்துபோன கௌரவத்தை மீளப்பெற முடியாவிட்டால், இந்த விசாரணைக் கமிஷன்களெல்லாம் அர்த்தமற்றதாகிவிடும்.

யுத்தத்திற்குப் பின்னர், போர்க்குற்றங்கள் தொடர்பாகவும், மனித உரிமைகள் மீறல் தொடர்பாகவும் தமிழ் மக்கள் ஒரு சர்வதேச விசாரணையை இன்றுவரை கோரிவருகின்றனர்.

இந்தியா போன்ற அயல் நாடுகளும் நேரடியாகவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஊடாகவும் தமிழ் மக்களின் கௌரவம் பாதுகாக்கப்படவேண்டும், சமத்துவம் உறுதிப்படுத்தப்படவேண்டும், அவர்களது அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவேண்டும் என்பதுடன், மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தி 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் மீண்டும் மீண்டும் சர்வதேச அரங்குகளில் சுட்டிக்காட்டி வருகின்றன.

ஆனால், இலங்கை அரசாங்கமோ இவற்றைக் காலதாமதப்படுத்துவதிலும் ஒத்தி வைப்பதிலும் தேர்தல்களை நடாத்தாமல் இழுத்தடிக்கும் நடவடிக்கைகளிலுமே ஈடுபட்டு வருகின்றது.

ஆகவே, நாட்டின் நன்மைகருதியும் பொருளாதார அபிவிருத்தி கருதியும் இவை எல்லாவற்றிற்கும் ஒட்டுமொத்தமான தீர்வைக் காணும் முகமாக சர்வதேச விசாரணை என்பது உறுதிப்படுத்தப்படவேண்டும். ஜனாதிபதியும் அரசாங்கமும் இதனைப் புரிந்துகொண்டு கடமையாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம், என்றும் அவரது அறிக்கையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டிருக்கிறார்.

## ஐக்கிய நாடுகள் சபையின்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெர்னாண்டோ அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை இன்று அழைக்கப்பட்டிருந்த போதே, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ் மேற்கண்டவாறு அறிவித்தார்.

இந்த மனு இன்று அழைக்கப்பட்டிருந்தபோது, சம்பவம் தொடர்பாகப் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரால் மேற் கொள்ளப்பட்ட விசாரணைக் கோப்புகளை ஆராய்ந்த பின்னர் மனுதாரர் ஹரின் பெர்னாண்டோ குறித்த விசாரணையை முடிவுறுத்துமாறு சட்டமா அதிபரால் கடந்த ஜூன் மாதம் 20ஆம் திகதி பணிப்புரை விடுத்திருந்ததாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

புவனேக அலுவிஹாரே, பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் இந்த மனு இன்று அழைக்கப்பட்டிருந்தது.

அதேநேரம், இந்த மனுவை முன்னோக்கிக்கொண்டு செல்வதா, இல்லையா? என்பதை தீர்மானிப்பதற்காக ஜனக் டி சில்வா அங்கம் வகிக்காத நீதிபதிகள் குழாம் முன்னிலையில் எதிர்வரும் 18ஆம் திகதி மனுவினை அழைப்பதற்கும் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (04)

## ஐக்கிய நாடுகள் சபையின்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கொள்வது என்பது பற்றியும் விவாதிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (04)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்



# பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை

## -கல்முனை மாநகர சபை அறிவிப்பு



(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கி வருகின்ற அனைத்துத் தனியார் கல்வி நிலையங்களும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக மாநகர சபையில் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் இல்லையேல் சம்மந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள விசேட அறிவித்தலில், கல்முனை மாநகர சபை எல்லையினுள் இயங்கி வருகின்ற பல தனியார் கல்வி நிலையங்கள் மாநகர சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும், இன்னும் பல தனியார் கல்வி நிலையங்கள் தம்மைப் பதிவு செய்து கொள்ளாமல் இயங்கி வருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான நிறுவனங்கள் மாநகர சபையில் தம்மைப் பதிவு செய்து கொள்ளாமல் இயங்குவதானது சட்டவிரோத செயற்பாடாகும் என்பதை சம்மந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், போதைப்பொருள் பாவனையில் இருந்தும் கலாசார சீர்கேடுகளில் இருந்தும் மாணவர்களை பாதுகாத்து, நெறிப்படுத்தும் பொருட்டு ஜம்மியத்துல் உலமா சபை உள்ளிட்ட பொது அமைப்புகளின் வேண்டுகோளின் பேரில், பொருத்தமற்ற நேரங்களில் ரியூசன் வகுப்புகள் நடத்தப்படுவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் எமது மாநகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்களினால் இந்த நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

ஆகையினால், அனைத்துத் தனியார் கல்வி நிலையங்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து, அவற்றைக் கட்டுக்கோப்புடன் முறையாக ஒழுங்குபடுத்துவதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எனவே, இதுவரை பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக மாநகர சபையில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று இத்தால் அறிவுறுத்தப்படுகிறது.

குறித்த காலப்பகுதியினுள் பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் நடத்துநர்கள் மீது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் அவற்றை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன்.

அத்துடன் வீடுகளில் தனிப்பட்ட முறையில் ஆசிரியர்களினால் நடத்தப்படும் ஆரம்பக் கல்வி மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைக்கான மேலதிக வகுப்புகளுக்கும் இவ்வறிவுறுத்தல் பொருத்தமானது என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களும் தம்மை ஒரு கல்வி நிலையமாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் இத்தால் அறிவுறுத்தப்படுகின்றனர், என்று குறிப்பிட்டுள்ளார்.

# சமூக விஞ்ஞானப் போட்டியில் மாகாணத்தில் முதலிடம்



(வி.ரி.சகாதேவராஜா)

இம்முறை நடைபெற்ற கிழக்கு மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் சம்மாந்துறைக் கல்வி வலயத்தில் இருந்து மூன்று மாணவர்கள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்று தேசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரியின் ஏழாம் தரத்தில் கல்வி பயிலும் எம்.கே.யூசுப் ஷயான் முதலாம் இடத்தைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்துள்ளதாக கல்லூரி அதிபர் எம். ஐ. மாஹிர் தெரிவித்தார்.

குறித்த மாணவன் சமூக விஞ்ஞானப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்குத் தெரிவானதைத் தொடர்ந்து, பாடசாலைச் சமூகம் அண்மையில் இவரைப் பாராட்டிக் கௌரவித்தது.

குறித்த மாணவன், ஆசிரியர்களான எஸ். எல்.எம். குத்தூஸ், எஸ்.எல்.பஸ்மியா தம்பதிகளின் புதல்வன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# நான்கு பதிலமைச்சர்கள் ஜனாதிபதியால் நியமிப்பு



ஜனாதிபதி வெளிநாட்டுக்கு விஜயம் செய்துள்ள நிலையில் அவரது பொறுப்புகளை கவனிப்பதற்கு பதிலமைச்சர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, பதில் நிதியமைச்சராக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவும், பாதுகாப்பு பதில் அமைச்சராக பிரமித்த பண்டார தென்னகோனும், தொழிநுட்ப பதில் அமைச்சராக இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்தும், சிறுவர், மகளிர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராக இராஜாங்க அமைச்சர் அனுாப பெஸ்குவலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# சமுர்த்திக் குடும்ப மாணவர்களுக்கான "சிசுபல சமாஜ சத்காரய" திட்ட உதவிகள்

(எம்.எப்.நவாஸ்)

மாவட்ட மட்டத்திலான சமுர்த்திக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான "சிசுபல சமாஜ சத்காரய" வேலைத்திட்டத்தின் கீழ், பாடசாலை மாணவர்க ளுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்ஸார் அவர்களின் தலைமையில் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்டச் சமுர்த்திப் பணிப்பாளர், எம்.எஸ்.எம்.சப்றாஸ் கலந்து கொண்டார்.






# கல்வி முறையில் மாற்றம் கொண்டுவரவேண்டும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச ஆலோசனை



நாட்டின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு ஏற்ற வகையில், தேசிய கல்விக் கொள்கையொன்றை உருவாக்க வேண்டும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, நாட்டில் மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளதாகத் தெரிவித்தார்.

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை, ஆரம்பத்திலேயே ஒரு போட்டித் தன்மையை ஏற்படுத்துவதாகவும் இந்தப் போட்டியால் குழந்தைகளிடையே வெறுப்பும் கோபமும் எழுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளிலும் போட்டி நிலவுவதாகத் தெரிவித்த அமைச்சர், போட்டித் தன்மையைக் கொண்ட கல்வி முறை இருக்கும் வரை, நாட்டிற்காக ஒரு தன்னலமற்ற சமூகத்தை உருவாக்குவது கடினம் எனவும் கூறினார்.

பிள்ளைகளுக்கு ஓய்வுடன் கூடிய மனநிலை இருக்கவில்லை என்றால், அறிவைப் புரிந்துகொள்வது கடினம் என்றும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

போட்டியின் பின்னர் பல்கலைக்கழகங்களுக்குள் பிரவேசிக்கும் பெரும்பாலான மாணவர்கள், மன உளைச்சலுக்கு ஆளாகியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது எனவும், இந்தக் காரணங்களுக்காக, பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படும் முன்னுரிமையை முன்பள்ளி மேம்பாட்டுக்கும் வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும், கடந்த காலத்தில் கல்வி முறையில் ஏற்பட்ட தவறுகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்க பல்வேறு ஆலோசனைகளை முன்வைத்துள்ளோம் என்றும், 10 ஆம் வகுப்பில் சாதாரண தரப் பரீட்சையையும், 12ஆம் வகுப்பில் உயர்தரப் பரீட்சையை நடத்துவது குறித்தும் பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம் என்றும் அவர் கூறினார்.

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள இலவசக் கல்வி முறை தொடர்பில் விரிவான கருத்தாடல் ஒன்று அவசியம் என்றும் இதன்போது அமைச்சர் தெரிவித்தார்.

அத்தோடு, நாட்டு மக்களையும் உள்ளடக்கிய தேசிய அரச கொள்கையொன்றைத் தயாரிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றும், நாடாளுமன்றில் சட்டமொன்றை நிறைவேற்றுவதன் மூலமே இந்தக் கொள்கை தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

# சைபர் தாக்குதல் மூலம் இலக்குவைக்கப்பட்ட 300 அரச நிறுவனங்களின் மின்னனு கோப்புகள் மீட்கப்பட்டன



அமைச்சரவை அலுவலகம் உட்பட சுமார் 300 அரச அலுவலகங்களின் மின்னணுக் கோப்புகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இணையத் தாக்குதல் முறியடிக்கப்பட்டு அவை மீட்கப்பட்டதாக இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிலையத்தின் நிறைவேற்று அதிகாரி மகேஷ் பெரேரா தெரிவித்தார்.

கடந்த மே 17ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 26 ஆம் திகதி வரை இந்த சைபர் தாக்குதல் நடைபெற்றதாகவும், சுமார் 300 அரச அலுவலகங்களின் 5000 மின்னணுக் கோப்புகள் இவ்வாறு அத்துமீறி எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பான நடவடிக்கைகள் தற்போது இலங்கைக் கணினித் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதேவேளை, ஜனாதிபதி அலுவலகம், பாதுகாப்பு அமைச்சு, நாடாளுமன்றம் உள்ளிட்ட பல அரச நிறுவனங்களின் அலுவலகங்கள் இதில் உள்ளடங்கவில்லை என்றும் பெரேரா தெரிவித்தார்.

9 வருடங்கள் பழைமையான இந்தக் கணினி வலையமைப்பு முறையைப் புதுப்பிக்க முயற்சித்தாலும், நிதி வசதி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் அது முடியாமல் போயுள்ளது. எனினும், இனிமேல் இது போன்ற சைபர் தாக்குதல்களுக்கு ஆளாகாமல் இருப்பதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவோம் எனவும் மகேஷ் பெரேரா மேலும் தெரிவித்தார். (ரெ-13)

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்

## மைத்திரிபால சிறிசேன வலியுறுத்து



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சனல் 4 சமீபத்தில் அம்பலப்படுத்திய விடயங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக கடந்த நான்கு ஆண்டுகளில் தன் மீது பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்ததாகவும், இருப்பினும் சனல் 4 ஆவணப்படம் தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்களை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் நடந்ததற்கும் உணர்ந்ததற்கும் முற்றிலும் மாறுபாடு உள்ளமையினால் இந்த விவகாரம் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் என்றும் மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டியுள்ளார். (04)

# அபிவிருத்திச் செயற்பாடுகளைத் திட்டமிடும்போது முறையான அறிவித்தல்களை வழங்கவேண்டும்!

## ஜனாதிபதியின் செயலர் சமன் ஏக்கநாயக்க பணிப்பு



நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளைத் திட்டமிடும்போது, அது தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழு என்பவற்றுக்கு அறிவிக்குமாறு அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு கடிதம் மூலம், ஜனாதிபதியின் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரச மற்றும் அரை-அரச நிறுவனங்களால், மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து, செயல்படுத்தும்போது அது குறித்து, மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களுக்கு அறிவிக்காமையினால், அரச அதிகாரிகளுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடைவெளி ஏற்பட்டுள்ளது.

மேலும், மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்கள் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகளைச் சமர்ப்பித்து வருவதுடன், அரச அதிகாரிகளுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்குமிடையிலான தொடர்பு இன்மையால் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டுள்ள தடைகள் தொடர்பாகவும் ஜனாதிபதியின் செயலாளர் கவனம் செலுத்தியுள்ளார்.

இதன்படி, இந்த நடவடிக்கைகளின்போது, அரச அதிகாரிகளுக்கும் அரசியல் பிரதிநிதிகளுக்கும் இடையில் முறையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் நோக்கில் ஜனாதிபதியின் செயலாளர் இந்தப் பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

இனிமேல், அரச மற்றும் அரை அரச நிறுவனங்கள் மூலம் மாவட்ட மட்டத்திலோ அல்லது பிரதேச மட்டத்திலோ அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடும்போதும் செயல்படுத்தும் போதும் மாவட்ட அபிவிருத்திக் குழு மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக்களுக்கு அது குறித்து அறிவித்து, அவர்களின் ஒத்துழைப்புடன் செயற்படுமாறு ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்துள்ளார். (04)

# ரயிலில் இருந்து கீழே விழுந்து பலியான இளைஞருக்கு இழப்பீடு

பணிப்புறக்கணிப்புக்கு மத்தியில் ஹொரபே பகுதியில் ரயிலின் கூரையில் பயணித்த நிலையில், கீழே விழுந்து உயிரிழந்த இளைஞரின் குடும்பத்திற்கு 5 லட்சம் ரூபாய் வழங்க ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரயில் சாரதிகளின் பணிப்புறக்கணிப்பு காரணமாக இன்று திட்டமிடப்பட்டிருந்த 13 ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

வேலை நிறுத்தம் காரணமாக நேற்று 119 ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டன. இதையடுத்து.

ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக மாற்றும் விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி நேற்று இரவு வெளியிட்டார்.

அதேநேரம், பல ரயில் நிலையங்களுக்கு இராணுவப் பாதுகாப்பினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)


JAFFNA'S FIRST HOUSING & CONSTRUCTION EXHIBITION
JAFFNA
HOUSING & CONSTRUCTION
EXHIBITION
2023
யாழ் மண்ணில் முதல் முறையாக
யாழ் வீடமைப்பு மற்றும் கட்டுமான
கண்காட்சி 2023
FOR ENQUIRY CALL MINHAJ 077 888 2700
கட்டிட நிர்மாணம், வீடமைப்பு
மற்றும் வீட்டு உபகரணங்கள்
தொடர்பான அனைத்து விடயங்களும்
ஒரே கூரையின் கீழ்.
அனைவரையும் அழைக்கின்றோம்
15 16 17
SEPTEMBER
MUTTRAWELI GROUNDS, JAFFNA
Official Sponsor
Hayleys
Aventura
Innovative Solutions
Organizer
Iyngaran Media Solution (Pvt) Ltd.
In Association
CCI
Chamber of Construction Industry of Sri Lanka
Radio Partner
Print Media Partner
வீரகேசரி
Digital Media Partner
காலைக்கதிர்

## கல்முனை மாநகர பாடசாலைகளில்

# திண்மக்கழிவகற்றல் சேவைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை




(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகராட்சி எல்லையினுள் அமைந்துள்ள அரச பாடசாலைகளில் திண்மக் கழிவகற்றல் சேவையை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டம் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, திண்மக்கழிவகற்றல் பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் பாடசாலைகளின் அதிபர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, பாடசாலைகளில் திண்மக் கழிவகற்றலை மேற்கொள்ளும்போது எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் மற்றும் ஆலோசனைகளை அதிபர்களிடம் கேட்டறிந்து கொண்ட மாநகர ஆணையாளர், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் பற்றி தெளிவுபடுத்தினார்.

திண்மக்கழிவகற்றல் சேவையின் போது மாநகர சபையினால் வகுக்கப்படும் பொறிமுறைகளுக்கேற்ப, திண்மக் கழிவகற்றல் வாகனங்களில் குப்பைகள் ஒப்படைக்கப்படுமாயின் பாடசாலைகளில் இருந்து அவற்றை இலகுவாக அகற்றிக் கொள்ள முடியும் எனவும் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, உக்கும் கழிவுகள் மற்றும் உக்காத கழிவுகள் என குப்பைகளை வகைப்படுத்தி வெவ்வேறு பைகளில் சேகரித்து வைக்க வேண்டும் எனவும், அவற்றைப் பாடசாலைகளின் நுழைவாயில்களில் வைத்துத் தாமதமின்றி உரிய நேரத்தில் ஒப்படைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

இதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக, குப்பைகளை வகைப்படுத்திச் சேகரிப்பதற்கான பைகள் அனைத்துப் பாடசாலைகளுக்கும் மாநகர சபையினால் இதன்போது இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.




## முல்லைத்தீவு மாவட்டத்தில் இரத்தக் கொடை முகாம்



சிவில் பாதுகாப்புத் திணைக்களம் தனது 17ஆம் ஆண்டை நிறைவு செய்யும் முகமாக, நாட்டில் உள்ள அனைத்து சிவில் பாதுகாப்புத் திணைக்களங்களிலும் சிறப்பு சேவைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், இன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு புன்னைநீராவிப் பகுதியில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் லெப்ரினன்ற் கேணல் சந்தன சோமபாலவின் ஏற்பாட்டில், தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு, சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் குருதிக் கொடையினை வழங்கியுள்ளனர். (02)

## நீர்ப்பாசன அமைச்சின் மேலதிகச் செயளாளர் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்கு விஜயம்



(எம்.எப்.நவாஸ்)

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை மற்றும் ஆலையடிவேம்புப் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட விவசாய மற்றும் நீரேந்துப் பிரதேசங்கள் முறையான அனுமதியின்றியும் திட்டமிடப்படாத வகையிலும் மண்ணிட்டு நிரப்படுவதனை ஆராய்ந்து, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் முகமாக, நீர்ப்பாசன அமைச்சின் மேலதிகச் செயளாளர் திருமதி சன்டியா எதுகல தலைமையிலான உத்தியோகத்தர்களடங்கிய குழு, அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்கு அண்மையில் விஜயம் செய்தது.

அன்றைய தினம் பிரதேச செயலாளர் ரி.எம்.முகமட் அன்சார் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்திலும் களப் பரிசோதனைகளிலும் அதிகாரிகள் பங்குபற்றினர்.

# ரஷ்ய அதிபர் புடினைச் சந்தித்தார் வட கொரிய அதிபர் கிம் ஜோங்-உன்

**ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை வட கொரிய அதிபர் கிம் ஜோங்–உன் இன்று நேரில் சந்தித்தார்.**



அணு ஆயுதச் சோதனைகளை நடத்தியதன் மூலமும் ஐ.நா. தடையையும் மீறி நீண்ட தொலைவு பாய்ந்து செல்லும் பலிஸ்டிக் வகை ஏவுகணைகளை உருவாக்கி வருவதாகவும் சர்வதேச அளவில் வட கொரியா நீண்ட காலமாகவே தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கத்திய நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரைன் மீது படையெடுத்ததன் மூலம் ரஷ்யாவையும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் சர்வதேச அளவில் தனிமைப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளன.

இந்தச் சூழலில், இரு நாடுகளின் அதிபர்களான கிம் ஜோங்-உன்னும், விளாடிமிர் புடினும் நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைக்காக கிம் ஜோங்-உன் பயணம் மேற் கொண்ட ரயில், நேற்று செவ்வாய்க் கிழமை ரஷ்யாவைச் சென்றடைந்தது. மொஸ்கோ வில் இன்று ரஷ்ய அதிபரை சந்தித்து கிம் ஜோங்-உன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது, தங்களுக்குத்தேவையான சில பொருளாதார உதவிகளை புடினிடம் கிம் ஜோங்-உன் கோரியிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

முக்கியமாக, உக்ரைன் போரில் ரஷ்யா பயன்படுத்துவதற்கான ஆயுதங்களை விற்பனை செய்வதற்கான ஒப்பந்தம் இந்தப் பயணத்தின்போது மேற்கொள்ளப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. வட கொரியாவிடமிருந்து எறிகணைக் குண்டுகள், பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் போன்றவற்றைக் கொள்முதல் செய்ய ரஷ்யா விரும்புவதாகவும் கூறப்படுகிறது.

(04)

# சிங்கப்பூர் அதிபராக நாளை பொறுப்பேற்கிறார் தர்மன்



சிங்கப்பூர் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைப் பூர்விகமாகக் கொண்ட தமிழரான தர்மன் சண்முகரத்தினம் அந்தப் பொறுப்பை நாளை வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக ஏற்கவிருக்கிறார்.

சிங்கப்பூரின் எட்டாவது அதிபரும், முதல் பெண் அதிபருமான ஹலீமா யாகூபின் பதவிக் காலம் நிறைவடைவதைத் தொடர்ந்து, அடுத்த அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இந்த மாதம் முதலாம் திகதி நடைபெற்றது. இந்தத் தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தர்மன் சண்முகரத்தினம் மொத்தம் பதிவான 24.8 லட்சம் வாக்குகளில் 17.46 லட்சம் (70.4 சதவீதம்) வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அதையடுத்து, சிங்கப்பூரின் ஒன்பதாவது அதிபராக தர்மன் சண்முகரத்தினம் நாளை வியாழக்கிழமை பொறுப்பேற்கவிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (04)

# வலைதளத் தேடலில் தனி ஆதிக்கம் கூகுள் மீது அமெரிக்காவில் வழக்கு




வலைதளத் தேடலில் ஆதிக்கம் செலுத்தியதன் மூலமாக மற்றப் போட்டி நிறுவனங்களை கூகுள் தடுத்ததாக நீதிமன்றத்தில் அமெரிக்க அரசு வாதத்தை முன்வைத்துள்ளது.

ஐபோன் உள்ளிட்ட கையடக்கத் தொலைபேசிகளில் கூகுள் நிறுவனம் தனது வலைத்தளத் தேடல் வசதியை முன்கூட்டியே பதிவிறக்கம் செய்து வழங்கியது. அதன் காரணமாக, மற்ற போட்டி நிறுவனங்கள் பாதிக்கப்பட்டதாக அமெரிக்காவின் முந்தைய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிக்காலத்தில் நீதிமன்றத்தில் அந்நிறுவனம் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது.

அந்த வழக்கின் விசாரணை சில வாரங்களுக்கு முன் தொடங்கியது. அந்த வழக்கில் நீதித் துறை சார்பில் ஆஜராகி வாதிட்ட வழக்குரைஞர்கென்னத் டின்ட்ஸர், “கூகுள் தனது ஆதிக்கத்தின் மூலமாக மற்ற போட்டி நிறுவனங்களை முடக்கியது. அதனால், தொழிநுட்ப புத்தாக்கமும் பெருமளவில் பாதிக்கப்பட்டது. இணையத்தளத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முக்கிய வழக்காக இது உள்ளது. கூகுள் தனது போட்டி நிறுவனங்களை செயல்பட அனுமதிக்குமா? என்பதை இந்த வழக்கில்தான் தீர்மானிக்க முடியும்” என்றார்.

இந்த வழக்கின் விசாரணை அடுத்த 10 வாரங்களுக்கு நடைபெறவுள்ளது. பல்வேறு தரப்பைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் வாதங்களை முன்வைக்கவுள்ளனர். அமெரிக்க மாகாண நீதிபதி அமித் மேத்தா இந்த வழக்கை விசாரித்து வருகிறார். அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் வழக்கின் தீர்ப்பை அவர் வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வழக்கில் கூகுள் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்தவும் நீதிமன்றம் திட்டமிட்டுள்ளது. (04)

# தமிழகத்தில் நிபா வைரஸ் பாதிப்பு யாருக்கும் இல்லை! - அமைச்சர்



தமிழகத்தில் நிபா வைரஸ் பாதிப்பு யாருக்கும் இல்லை. எனவே, பொதுமக்கள் யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை, என்று தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலத்தின் அண்டை மாவட்டங்களாக உள்ள கோவை, நீலகிரி, திருப்பூர், தென்காசி உள்ளிட்ட 6 மாவட்டங்களில் சுகாதாரத்துறை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

கேரளாவின் எல்லையோரப் பகுதிகளில் உள்ள சோதனைச் சாவடிகளில் மருத்துவ அதிகாரிகள் அந்த வழியாகச் செல்லும் வாகனங்களைக் கண்காணித்து, காய்ச்சல் அறிகுறியுடன் எவரேனும் உள்ளனரா? என்பது குறித்துப் பரிசோதனை நடத்தி வருகின்றனர். காய்ச்சல் பாதிப்பு இருப்போருக்கு உடனடியாகச் சிகிச்சை வழங்கவும் அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் 19 பகுதிகளில் மாவட்ட அரச மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. இந்த நிலையில், மாநில அளவில் மேலும் 6 புதிய மாவட்ட மருத்துவமனைகள் அமைக்கப்பட உள்ளன. இதற்காக 1100 கோடி மதிப்பில் கட்டடப்பணிகள் நடந்து வருகின்றன, என்றும் அமைச்சர் கூறினார். (04)

# வியட்நாமில் பயங்கரத் தீ விபத்து 12 பேர் பலி, 50 பேருக்குக் காயம்!

வியட்நாம் தலைநகர் ஹனோயில் 9 அடுக்குமாடிகளைக் கொண்ட கட்டடத்தில் ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நீண்ட நேரம் போராடி, தீ அணைக்கப்பட்டது. அப்பகுதியில் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கட்டடத்தில் 150 குடியிருப்பாளர்கள் வசித்து வருகின்றனர். தீ விபத்திலிருந்து மீட்கப்பட்ட 70 பேரில் 54 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தீ விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தெற்கு வியட்நாமின் பின் டுயோங் மாகாணத்தில் உள்ள கரோக்கி பார்லரில் கடந்தாண்டு ஏற்பட்ட தீ விபத்தில் 32 பேர் பலியாகினர் என்பது நினைவுகூரத்தக்கது. (04)

# நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு இரத்தான முகாம் நடைபெறுகிறது!



# நல்லூர்க் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா இன்று




வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத் தேர்த்திருவிழா இன்றைய தினம் காலை இடம்பெற்றது.

காலை 6.15 மணியளவில் ஆரம்பமான வசந்த மண்டபப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, ஆறுமுகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய், காலை 7 மணியளவில் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். தொடர்ந்து, தேரில் வெளிவீதி உலா வந்தார்.

இன்றைய தேர்த்திருவிழாவின் போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் வந்து முருகப் பெருமானை வழிபட்டனர்.

அங்கப் பிரதட்சணம் செய்தும் காவடிகள் எடுத்தும் கற்பூரச் சட்டிகள் ஏந்தியும் முருகப் பெருமானை அவர்கள் வேண்டினர்.

நாளைய தினம் வியாழக்கிழமை காலை 6 மணியளவில் தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளன. (01)
















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.09.2023இல் வெளியிடப்பெற்றது.